2. அறிவிப்புகள்.

(அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு மாற்றுத் தலைவர்கள் பட்டியல் இப்போது அறிவிக்கப்படுகிறது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9, உள்விதி (1)-ன்கீழ் கீழ்க்கண்ட உறுப்பினர்களை இப்பேரவையின் முதல் கூட்டத் தொடரில் மாற்றுத் தலைவர்களாக (Panel of Chairman) நியமிக்கிறேன்:—

1. திரு. மு. இராமநாதன்
2. திரு. என். கணபதி
3. திரு. பெ. சீனிவாசன்
4. திரு. கே. ஏ. செங்கோட்டையன்
5. திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்
6. திரு. சி. கோவிந்தராசன்.

3. உரிமைப் பிரச்சினை

அவையில் வரக்கூடிய பொருள்பற்றி முன்கூட்டியே வெளியிட்டதாகக் கூறப்பெறுவது குறித்து

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஓர் உரிமைப் பிரச்சினையை இங்கே கொண்டு வந்திருக்கிறேன். பேரவை விதிகளின்படி அதுதான் முதலில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். விதி 221.

"Provided that a question of privilege arising during the sitting of the House shall be entitled to immediate precedence over all other business''. என்றிருக்கிறது. ஆகவே, அதற்கு உங்கள் இசைவைக் கோருவதற்கு என்னை அனுமதிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் அளித்த உரிமை மீறல் பிரச்சினை குறித்து ஆய்ந்து கொண்டிருக்கிறோம். எனினும், இப்போது தங்களுக்கு இந்த விடை சொல்லப்படுகிறது. பாராளுமன்ற நடைமுறைகளின்படி இந்த அவையில் வரக்கூடிய பொருள்பற்றி முன்கூட்டியே வெளியிடுதல், அவை உரிமைப் பிரச்சினையில் வாராது. அவைக் கூட்டம் நடைபெறும்போது மட்டும் அவற்றை அவையில் முதலில் சொல்வது ஒரு மரபாக உள்ளது. இப்போது எழுப்பப்பட்டுள்ள உரிமைப் பிரச்சினையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அவர்களுடைய கட்சியின் தேர்தல் அறிக்கையில் உள்ளதைத்தான் சொல்லியிருக்கிறார்கள். எனவே இதில் எந்தவிதமான உரிமைப் பிரச்சினையும் இல்லை.

1989 பிப்ரவரி 13] (பேரவைத் தலைவர்)

மேலும் பாராளுமன்றத்திலும், மற்ற சட்டமன்றங்களிலும் நிதிநிலை அறிக்கையில் கண்டுள்ள பொருள்களை முன்னமேயே வெளியிட்டாலும்கூட, அது அவை உரிமைப் பிரச்சினையில் அடங்காது என்று பல தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. ஆளுநர் உரைக்குப் பின்புதான் அவைக் கூட்டமே தொடங்குகிறது. எனவே இதில் மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது, அவை உரிமை மீறல் பிரச்சினை எதுவுமில்லை என்று தெரிவித்து அமைகிறேன்.

திரு. சா. பீட்டர் அல்போன்ஸ்: பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே இரண்டு பிரச்சினைகளைச் சொல்லியிருக்கிறேன் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தீர்ப்புக்குப் பிறகு எதையும் எழுப்பக்கூடாது என்பது அவையின் மரபு.

(முற்பகல் 10-10)

4. தகவல் கோரல்.

முன்னாள் முதலமைச்சர்களின் உருவப் படங்களை பேரவையில் வைத்தல்.

*திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உங்கள் மூலமாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வாயிலாக நாட்டு மக்களுக்கு மகிழ்ச்சி அளிக்கத்தக்க தொரு அறிவிப்பை அன்போடு எதிர்பார்க்கிறேன். தமிழக சட்டமன்றத்தில் ஏறக்குறைய 11 ஆண்டுக் காலம் தமிழக முதலமைச்சராகத் தொடர்ந்து பணியாற்றி, மக்களுடைய இதயத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களுடைய உருவப் படம் சட்டமன்றத்திலே திறந்து வைக்கப்படும் மகிழ்ச்சியான நாளை முதலமைச்சரவர்கள் அறிவிக்க வேண்டுமாய் உங்கள் மூலமாக, இந்த ஒழுங்குப் பிரச்சினை வாயிலாக வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை நீங்கள் ஆளுநர் உரை மீதான விவாதத்தில் சொல்வது பொருத்தமாக இருக்கும். இது ஒழுங்குப் பிரச்சினையாகாது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த ஒழுங்குப் பிரச்சினை மூலமாக மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் ஒரு பெருந்தன்மையான அறிவிப்பைத் தான் நாங்கள் எதிர்பார்த்தோம். இந்தச் சட்டமன்றத்தில் கட்சிகளுக்கு அப்பாற்பட்டு பல்வேறு தலைவர்களுடைய படத்தையும் புரட்சித் தலைவரவர்கள் முதலமைச்சராக இருந்தபோது திறந்து வைத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே அவருடைய படத்தைத் திறந்து வைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்,